விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 1 ரம்ழான் 25 இதழ் 125
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-6-1985

## வடக்கு—கிழக்கில் மாநில ஆட்சி முறை கிடைக்க ரஜீவ் முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவில் உள்ளது போன்ற மாநில சுயாட்சி முறையே இலங்கை பிரச்னைக்கும் தீர்வாக அமைய வேண்டும். அதுபற்றியே பேச்சுவார்த்தைகள் அமையும் என்று இந்தியப்பிரதமர் ரஜீவ் காந்தி கருத்துக் கொண்டுள்ளார் என்று 'இந்து' பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

அதே சமயம் மாவட்ட சபை அமைப்புடன் கூடிய மாகாணசபை ஆட்சி முறையிலேயே அதிகார பரவலாக்கல் இடம் பெற வேண்டும்

(8-ம் பக்கம் பார்க்க)

## புத்த பிக்கு காவல்

(திருகோணமலை)

தமிழ் தீவிரவாதிகளால் சேருவில பௌத்த விகாரை தாக்கப்படாது பாதுகாக்கும் வண்ணம் மேற்படி விகாரையின் மதகுரு ஒருவர் இருபத்து

(8-ம பக்கம் பார்க்க)

### ●●● இந்திய பிரதமர் நாடு திரும்பியதும்

# கூட்டணித் தலைவர்கள் ரஜீவ் பார்த்தசாரதியை சந்திப்பர்!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அமெரிக்காவிலிருந்து தாய் நாடு திரும்பியதும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் புதுடில்லி சென்று, இந்தியப் பிரதமர், வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு சம்பந்தன் ஆகியோர் புதுடில்லி சென்று இந்தியப் பிரதமருடன் இலங்கை இனப்பிரச்னையின் தீர்வு பற்றியும், அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற ரஜீவ்—ஜெயவர்த்தன பேச்சுவார்த்தைகளின் விபரங்கள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் பேசவுள்ளார்கள்.

தற்போது சென்னையில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இலங்கை இனப்பிரச்னையின் தீர்வு குறித்து பல தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றார்கள்.

இதேவேளை தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சென்ற பல பஸ்கள் திரும்பின!

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பெரும்பாலான பஸ்கள் வவனியாவுடன் திரும்பி வந்து விட்டன. ஒருசில பஸ்கள் மாத்திரம் கொழும்பு சென்றன.

கொழும்பிலிருந்து யாழ்.

(8ம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தனியார் வாகனச் சொந்தக்காரர்களுக்கு 5 லிற்றர் பெற்றோல் வீதம் யாழ். ப. நோ. கூ. சங்கத்தினரால் இன்றும் வழங்கப்படும்என்று அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்

## குண்டு வெடித்து நாய் பலி!

(கொழும்பு)

அக்கரப்பத்தனையிலுள்ள தேயிலைத் தோட்டமொன்றில் தேயிலைப்பற்றைக்குள் இருந்து குண்டு வெடித்ததினால் நாய் ஒன்று பலியானது.

தோட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## இருவருக்கு என்ன நடந்தது!

[வவனியா]

வவனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற லொறியில் பிரயாணம் செய்த இருவருக்கு என்ன நடந்தது?

வவனியாவின் பிரபல கடையொன்றுக்குச் சொந்தமான மேற்படி லொறி நேற்றுமுன்தினம் கொழும்பு புறப்பட்டது. சாரதியுடன் மேலும் இருவர்பயணமானார்கள் இவர்களில் ஒருவர் மில் மனேஜர் மற்றவர் ஒரு கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதி.

நேற்றுக்கிடைத்த தகவல்களின்படி சாரதிமட்டும் லொறியுடன் பத்திரமாகத் திரும்பி விட்டதாகத் தெரியவந்தது. இருவரின் நிலைமை தெரியவில்லை இந்த விஷயம்வவனியா அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது

## "நாம் தமிழீழ பிரஜைகள்: எங்களை விசாரிக்கமுடியாது"

### நீதிமன்ற வழக்கு விசாரணையில் எதிரிகள்

(கொழும்பு)

"நாம் தமிழீழப்பிரஜைகள், ஒரு சோஷலிச ஈழநாட்டைச் சேர்ந்தவர்கள். நாம் மாக்ஸிசவாதிகள். இது ஒருஜே ஆர் ஜெயவர்த்தன நீதிமன்றம், இது அரச பயங்கரவாதிகளின் நீதிமன்றம். இந்தநாட்டு சட்டத்துக்கு ஏற்ப எங்களை விசாரணை செய்ய முடியாது. எங்களை இந்த நீதிமன்ற கூண்டிலும் ஏற்ற முடியாது.''

மட்டக்களப்பு முன்னாள் மாநகரசபை உறுப்பினர் மாலா ராமச்சந்திரன் கொலை தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதவான் பி.இராமநாதன் முன்னிலையில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்காக எதிரி

(8ம் பக்கம் பார்க்க)

## புதிய பிரிட்டிஷ் தூதுவர்

[கொழும்பு]

இலங்கைக்கான புதிய பிரிட்டிஷ் தூதுவராக ஜோன்ஸ்

(8-ம பக்கம் பார்க்க)

### ★ வந்தவர்கள்: 147 ★ சென்றவர்கள்:25

## 'யாழ்.தேவி' வந்து திரும்பியது

(கா. யோகநாதன்)

கொழும்பு கோட்டையிலிருந்து 147 பிரயாணிகளுடன் நேற்று நண்பகல் 1-25 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடைந்த 'யாழ். தேவி' நேற்றுப் பிற்பகல் 2-16 மணிக்கு 25 பிரயாணிகளுடன் கொழும்புக்குப் புறப்பட்டது.

1984 டிசம்பர் 29-ம் தேதிக்குப் பின்னர் முதல் தடவையாக நேற்று யாழ். தேவி யாழ்ப்பாணத்துக்கு வந்தது. யாழ். தேவியில் புகையிரதப்பகுதி உதவிப் பொது முகாமையாளர் திரு. ஜெயசிங்காவும் வந்திருந்தார். நேற்று நண்பகல் யாழ் ரயில் நிலையத்திற்கு வந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், அவருடன் உரையாடினார்.

'யாழ் தேவி' கொழும்புக் கோட்டையில் நேற்று காலை 5-25 மணிக்குப் புறப்பட்டது.

...ருகம, வியாங்கொட, பொல்காவலை, குருநாகலை, கனேவத்த, மாகோ, கல்கமுவ, அநுராதபுரம், மதவாச்சி, வவனியா மாங்குளம், கிளிநொச்சி. கொடிகாமம், ஆகிய ரயில் நிலையங்களில் தரித்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது

ஆனையிறவு முகாமில் நண்பகல் 12 மணி 15 நிமிடமளவில் சிறிது நேரம் தரித்த

[8ம் பக்கம் பார்க்க]

## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்—ஊரெழு நிருபர்கள்)

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன உண்ணாவிரதப் போராட்டம் சிறிது காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்து நடைபெற்ற கொலைச்சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் அங்கு வேலை பார்க்கும் உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் உட்பட 2,500க்கு மேற்பட்டவர்

[8ம் பக்கம் பார்க்க]

## அநுராதபுரத்தில் நேற்று...

[அநுராதபுரம்]

அநுராதபுரத்தில் மக்கள் நடமாட்டம் நேற்று சற்றுக் குறைவாகக் காணப்பட்டது.

முக்கிய இடங்களில் கடைகள் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

கடந்த மாதம் 14-ம் திகதி தான் அநுராதபுரத்தில் பலர் கொல்லப்பட்டது தெரிந்ததே;

## யாழ். நகரில் இராணுவத்தினர் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று ஆயுதப் படையினர் நடமாட்டம் காணப்பட்டபோதும், மக்கள் மத்தியில் எவ்வித பதற்றமும் காணப்படவில்லை.

பஸ் நிலையத்திற்கருகில் வாகனங்களில் வந்த ஆயுதப்படையினர் நின்றபோது மக்கள் எவ்வித பதற்றமுமின்றி கடைகளில் சாமான் வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## டாக்டர் தற்கொலை!

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக முன்னாள் வைத்திய அதிகாரியான 64 வயதான டாக்டர் வாட்சன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மகனுக்கும் மருமகளுக்கும் சச்சரவு இருந்து வந்ததாகவும், இறந்தவரின் மகனுக்கு 2 பிள்ளைகள் என்றும் இரு மாதத்திற்கு முன் மருமகள் வந்து 2 பிள்ளைகளையும் கொழும்பிற்கு கூட்டிச் சென்றதாகவும் இதனால் இறந்தவர் மனமுடைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது

இவற்றினால் கவலையடைந்து நச்சுத்திராவகம் அருந்தினார் என விசாரணையில் கூறப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

## பலத்த குண்டுச்சத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு யாழ். நகரில் பலத்த குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன. செய்தி அச்சுக்குப் போகும்வரை என்ன நடந்தது என்று தெரியவில்லை.

# அபிவிளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள், தட்டச்சு இயந்திரம், Electrical goods, Play pen, Walker etc உடன் விற்பனைக்குண்டு. 66, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3701

பலாலி ரோட் வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் தொழிற்சாலை, வீடு கட்டக்கூடிய 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கலாம். "ஸ்ரீ நிலையம்" குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 3724

வெளியூர் போகிறபடியால் நல்ல கொண்டிசன் [One Owner] Morris Minor E L 7982 கார் விற்பனைக்குண்டு. Dr A. கந்தையா, 6, சுப்பிரமணியம் வீதி, வைரவர் கோவிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம். 3798

உரும்பராயில், கோப்பாய் வீதியில் வீடுகட்டக் கூடிய நல்ல தண்ணீர் உள்ள, இரண்டரை பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: K. M. கனகசிங்கம், கற்குளம்வீதி, கோப்பாய் றோட்டு, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 3799

வண்ணார்பண்ணையில் குடியிருப்புக்கேற்ற மிகச் சிறந்த சூழலில் 1 1/2 பரப்புக்காணி உடன்விற்பனைக்குண்டு: விபரங்களுக்கு: தம்பியையா விறகுகாலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை. வண்ணார் பண்ணை. 3758

சிங்கர்எலக்கிறிக். [Portable] மொடல் தையல் மெசின் 514, பாவித்த பனைத் தீராந்திகள். ஸ்ரியோ ஸ்பீக்கீகேஸ் 2 சோனி S.S 313. சிங்கர் கால் மெசின், Table Fan, Sisil R 80 குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 3796

வீடு கட்டுவதற்குகந்த மரங்கள். சிலாகைகள், தீராந்திகள், நிலை கதவுகள், யன்னல்கள், நஷனல் பனசோனிக் 2 in ONE 2 ஸ்பீக்கர்களுடனும், நிக்சி சிங்கர் தையல் மெசினும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: க. சண்முகரட்ணம், நடுத்தெரு, காரைநகர். 3787

சகல வசதிகளும் உள்ள வீடு இரண்டு பரப்புக் காணியுடன் மானிப்பாய் தெற்கில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; தி. விமலநாதன், புளியடிச் சந்தை, மானிப்பாய் தெற்கு. 3806

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட சோடாமூடி சீலிங் மெசின் (Crown Corking Machine; விற்பனைக்குண்டு. ருஜா ஸ்ரோர்ஸ், 67 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3808

## தேவை

மாநகர எல்லைக்குள் வசிப்பவரும் 20 வயதுக்கு மேற்படாத ஆண்கள். 20-6-85க்கு முன் விண்ணப்பிக்கவும் கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [3767]

## குத்தகைக்கு

யாழ். K. K. S. வீதியில் C. S. K. கட்டிடத்தில் 15-ம், இலக்கக் கடை குத்தகைக்கு உண்டு. தொடர்பு:- M T. சோமசுந்தரம், 199, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் 3771

## சேவை

யார் சொன்னது திருத்த முடியாது என்று! லிகுடைசர், பிளெண்டர் மற்றும் மோட்டர்கள், மின்விசிறிகள், ரான்ஸ் போமர்கள் (டெக், ரீவி, பூஸ்ரர்', எலெக்றிக் குக்கர்கள் ஆகியன மின்பொறியியலாளர் மேற்பார்வையில் ஒரு வருட உத்தரவாதத்துடன் திருத்த/ ரீவய்ண்டிங் செய்ய ஒமேகா, (ஈழநாடு முன்பாக) மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3776

## வைத்தியம்

நோய்பிணி துன்பம் நீங்கி இனிது வாழவும், பேய்பிசாசு கோளாறுகளிலிருந்து விலகிக் கொள்ளவும். வியாபார ஸ்தலங்கள் வீடுகள் முதலியன காவல் பண்ணவும், கடற்தொழில் விருத்தி, வியாபார விருத்தி முதலியவற்றிற்கு இயந்திரத் தகடுகளும், துவாக்களும் செய்துகொடுக்கப்படும். குறிப்பு: (வெளிநாடுகளில் பிரபலமிக்கவர்) இறைவனின் சக்தியினால் மலையாள முறையில் உடன் செய்து கொடுக்கப்படும். முகவரி: ஷாஹிஷிபா ஆத்ம ஆரோக்கிய நிலையம், இல: 125, பீச்-ரோட். யாழ்ப்பாணம். 3777

## TO LET

House to let. Contact immediately A C. George, 480, Navalar Road, Jaffna. 3804

## MATRIMONIAL

Brother seek marriage partner to pleasent looking sister age 39 years, Batticaloa Tamil, vellala, christian-methodist, employed in up-country side leading firm, a Govt. servant age between 40 to 43 years for early marriage. Dowry cash plus jewellaries. Advt No. 3783 C/o Eelanadu. Jaffna. 3783

## விற்பனைக்கு

வீடு கட்டக்கூடிய நிலம் வட்டுக்கோட்டை வட்டு-கிழக்கு, நொத்தாரிஸ் ஒழுங்கையில் விற்பனைக்குண்டு; தொடர்பு கொள்ளவும்: க. சண்முகசுந்தரம். 3820

நாலு பான்ட் மினி சீசியோ றேடியோ செசற். பெண்கள் சைக்கிள், வீடியோ ரேப், கசிகோ (எலாம்) கைக்கடிகாரம், கல்குலேட்டர், சிறிய நுணுக்காட்டி, பென்பிளாச், Pram இன்னும் பல பொருட்கள் மலிவு விலையில் சனி, ஞாயிறுகிழமைகளில் 01, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 3823

காது கேட்கும் கருவி (Hearing Aid) ஒன்று உடன் விற்பனைக்குண்டு- Make: 'RIONET' Japan. தொடர்பு: அம்பாள் றேடிங் என்ரைபிறைஸ், 234, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி: 23818. (3819)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்கும் இடையில் சங்கிலி ஒன்று பென்றனுடன் (3 பவுண் பெறுமதி) தவறிவிட்டது. கண்டுஎடுத்தவர்கள் கீழ் உள்ள விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 42, K. K. S. றோட், யாழ்ப்பாணம். 3812

## தேவை

சகலவித Motor, Fan-Rewinding செய்ய நன்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டுடன், எதிர்பார்க்கும் சம்பளம் முதலியவற்றுடன் 30-6-85க்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ற சம்பளம், மேலதிக ஊதியம் முதலியன கொடுக்கப்படும். C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (3811)

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவு சங்கம்
[வரையறுள்ளது]

**யாழ். ப. நோ. கூ. சங்க வைத்தியசாலை தளபாடங்கள், உபரணங்கள்:**

### மாபெரும் ஏலவிற்பனை

எதிர்வரும் 22-6-85 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இல:17, கண்டிவீதியிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் மேற்படி ஏல விற்பனை நடைபெறும். விபரங்கள் தேவையானோர் யாழ். ப. நோ. கூ. சங்கம், 127, காங்கேசன்துறை வீதி, அல்லது 22350 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

பதில்
**பொது முகாமையாளர்**
127. கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்,
11-6-85.

3792

## தேவை

தாவரவியல், விலங்கியல், பட்டதாரி ஆசிரியர் உயர் வகுப்புகளுக்கு கற்பிக்க உடன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
**மகளிர் கல்லூரி,**
பண்டத்தரிப்பு. (3784)

## தொழிற் பயிற்சிகள்

பின்வரும் பயிற்சிகளுக்கு 16 - 23 வயதுக் குட்பட்ட ஆண்களிடமிருந்து 22-06-85 இற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **விவசாயம்** ஒரு வருடம் கட்டணம் இல்லை.
2. **வெல்டிங்** 4 மாதம் கட்டணம் மாதம் ரூபா400/- (முழுப் பயிற்சிக்கும் ரூபா 1600/-)

இப்பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும். தங்குமிடமும் உணவும் இலவசம். பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
**வை. எம். சீ. ஏ.**
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

3788

## பிறந்தநாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் 15/1, நாச்சிமார் கோவில் வீதியைச் சேர்ந்த குமாரசாமி இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சோபனா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார் இவரை அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா-சித்திமார், அன்ரிமார், பெரியமாமா, ஜேர்மனி சித்தப்பா, கனடா சித்தப்பா, ஹொலன்ட் மாமா, மச்சான்மார், மச்சாள்மார் யாவரும் சகல கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 3780

யாழ்ப்பாணத்து "இசைவல்லார்" குப்பிளான் (காலஞ்சென்ற) சு. செல்லத்துரை-இரத்தினம்மா தம்பதிகளின் மூத்தமகன்


**செ. செல்வரத்தினம்**

[ஒப்பு நோக்குபவர் அரசாங்கஅச்சகம், கொழும்பு]

அவர்களின்

## ஓராண்டு நினைவஞ்சலி

**தோற்றம்: 18-03-1938 மறைவு: 26-06-1984**
**திதி: 15-06-1985**



எம் அருமை அண்ணா
எம் குலவிளக்கே,
எமைப் பிரிந்து ஏன்
போனாய்? சொல் அண்ணா!
தங்கச்சிமாரை விட்டுப்
பிரியேன் என்றாய்!
தங்கையரைத் தவிக்க
விட்டு மறைந்திட்டாயே!
எம் அன்னை அலைவடிவில்
உனை அழைக்க
எந்தை நீ சொல்லாமற்
கொள்ளாமல்
போய்விட்டாயே!
எம் அண்ணா நீ
மறைந்தாயா? இல்லை!
இல்லை!

எம்உயிரில் என்றென்றும் நீங்காமல் இருக்கின்றாயே!
சாந்தி! சாந்தி!

அண்ணா உங்கள் பிரிவால் வாடும் சகோதரங்கள்: கௌரி மனோகரி (மேற்கு ஜேர்மனி), கமலநாதன் (பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு), அபிராமி தேனுகா, சரஸ்வதி மனோகரி (வீமன்காமம் மகாவித்தியாலயம், ஆசிரியை), கோமதி தேவி. மைத்துனர்கள்: சபாரட்ணம் (மேற்கு ஜேர்மனி), கைலைநாதன் (காங்கேசன் சீமெந்து, தொழிற்சாலை) மருமக்கள்: நாகராசன். ராஜேஸ்வரி.
வேதக்கோயில் முன் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு. 3782

Science Academy
310, CLOCK TOWER ROAD, JAFFNA.
**A/L 87 புதிய பிரிவு**
ஆரம்பம்: 15-06-85.

### பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் இன்றைய நலன் நோக்கி பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைக்க உத்தேசித்துள்ளோம். மேற்படி சங்கக்கூட்டம் வட இந்து மகளிர் கல்லூரியில் எமக்குரிய பகுதியில் 15-06-85 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3744 அதிபர்.


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## உலகில் இராணுவத்தள அதிகரிப்பு:

# அமெரிக்கப் பாராளுமன்றில் ரஜீவ் கண்டனம்!

வாஷிங்டன், ஜூன் 14

"வல்லரசுகள் உலகில் இராணுவத்தளங்களை அதிகரித்துவருவது பெரும் அச்சுறுத்தலாகவும், கவலையளிப்பதாகவும் இருக்கின்றது" என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தெரிவிந்தார்.



திரு. ரஜீவ்காந்தி நேற்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் (காங்கிரஸ்) உரைநிகழ்த்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மக்கள்பிரதிநிதிகள்சபை உறுப்பினர்களும், செனட்சபை உறுப்பினர்களும் இவ் உரையை செவிமடுத்தனர்.

பக்கச்சார்பு எதுவுமின்றி நடுநிலையாக வல்லரசுகளின் இராணுவக் கெடுபிடிகளைக் கண்டிப்பதாக ரஜீவின் இவ் உரை அமைந்திருந்தது.

திரு. காந்தி தொடர்ந்து கூறியதாவது: "இந்துமாகடல் பிராந்தியங்களிலும் உலகின் ஏனைய கடல்பகுதிகளிலும் வல்லரசுகளின் இராணுவத்தளங்கள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த அதிகரிப்பு தெற்கு ஆசியாவில் இந்தியாவையும் அதன் பிராந்தியத்தையும் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வருகின்றது.

இவைதவிர இந்தியாவின் அண்டை நாடுகள் சிலவற்றில் நவீன ஆயுதங்கள் பெருமளவில் குவிக்கப்பட்டுவருவதும் இந்தியாவை நேரடியாகப் பாதிப்பதாகவுள்ளது" என்றார்.

திரு. காந்தி இந்தியாவின் விவசாய பொருளாதார வளர்ச்சிகள் குறித்தும் உரை நிகழ்த்தினார்; அப்போது அவர் கூறியதாவது; "இந்திய விவசாயத்துறையில் நவீன வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 60ம் ஆண்டுகளில் அமெரிக்கா வழங்கிய இந்தியாவுக்கான தொழில்நுட்ப உதவிகள் அந்நாட்டின் பசுமைப்புரட்சியில் பெரும்பங்கு வகித்துள்ளது. இந்த உதவிக்காக இந்தியமக்கள் அமெரிக்காவுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்தியாவின் பொருளாதாரத்தில் 60 சதவீதமான பங்கு தனியார்துறையினரிடமே உள்ளது. விவசாயமே இப்பெரும் பங்கைக் கொண்டுள்ளது. பெரும் விவசாயிகள் உட்பட சிறிய விவசாயிகளும் இதில் பங்கு வகிக்கின்றனர்.

எனவே இப்பெரும் தனியார்துறைப் பொருளாதாரத்தை வலுமிக்கதொரு அமைப்பாக மாற்றும் முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளது" என்றார். (கி)

## வயதில் குறைந்த விண்வெளிப் பயணி!

கலிபோர்னியா, ஜூன், 14

செல்வி ரெமி ஜேர்னிகன் என்ற இளம் பெண் உலகில் வயதில் குறைந்த விண்வெளிப் பயணியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்!

இவர் விரைவில் தமது விண்வெளிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார். அமெரிக்காவின் 'ஸ்ரான்போர்ட்' பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும் இவர், வானியல்பற்றிய கலாநிதிச் சான்றிதழ் ஒன்றுக்குத் தம்மைத் தயாராக்கிவருகின்றார்.

செல்வி ரெமி ஜேர்னிகனின் வயது 26 என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

## 108 நாடுகளுக்கு தமிழ் இளைஞர் சைக்கிள் பயணம்!

(சென்னை)

தமிழ்நாடு காமராஜர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் பாஸ்கரன் சைக்கிளில் உலகப் பயணமொன்றை ஆரம்பிக்கவுள்ளார்.

இவர் 108 நாடுகளுக்குச் சைக்கிளில் பயணம் செய்து 1989ம் ஆண்டளவில் தாயகம் திரும்புவார்.

1983—84ம் ஆண்டுகளில் இந்தியாவில் 22,898கிலோ மீட்டர் தூரத்தை இவர் சைக்கிளில் சுற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவரின் சைக்கிள் பயணம் இராமநாதபுரத்தில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. (கி)

## உதவிக்கரம்

(கொழும்புத்துறை)

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தில் கல்வி பயின்ற கல்வி பயிலாத சகல செவிப்புலனற்றோரையும் அங்கத்தவராகச் சேர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தின் மூன்றாவது ஆண்டு விழாவில் இதுசம்பந்தமாகத் தீர்மானிக்கப்பட்டது. செவிப்புலனற்றோர் என்று உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் அடையாள அட்டையும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் இவர்களது பாஷையும், அவர்கள் செய்கைகளின் மூலம் கதைப்பதற்கும், வலது குறைந்தோர் என்னும் குறையில்லாது சமுதாயத்துடன் மக்களுடன் ஒத்துப்போவதற்கும் பலவழிகளில் ஆதரவுவழங்குவதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தில் 100க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'ரவிசங்கரின் சித்தார் — கேரள கதகளி'

## வாஷிங்டனில் கோலாகல இந்திய விழா ஆரம்பம்!

வாஷிங்டன், ஜூன் 41

சர்வதேசப் புகழ் சித்தார் மேதை ரவிசங்கரின் சித்தார் இசை, கேரள கலாமண்டபத்தின் 'கதகளி' நடனம் ஆகியவற்றுடன் 'இந்தியவிழா' நேற்று வாஷிங்டனில் ஆரம்பமானது.

இவ்விழாவை பிரதமர் ரஜீவ் அவரது மனைவி சோனியா, அமெரிக்க அதிபரின் பாரியார் திருமதி நான்ஸி றீகன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

இந்தியக் கலைஞர்களின் தாளவாத்திய இசை நிகழ்ச்சியும் இவ்விழாவில் முக்கிய இடம்பெற்றது.

இந்தியக் கலாச்சாரங்களுக்கு முக்கியமளிக்கப்பட்ட இவ்விழாவில் இந்திய கைத்தொழில் உற்பத்திகளின் பொருட்காட்சியும் நடைபெற்றது.

அமெரிக்காவிலுள்ள இந்தியர்களும் பெருமளவு அமெரிக்கர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி றீகன்: "வாஷிங்டன் இந்தியவிழா அமெரிக்க இந்திய உறவுகளுக்கு ஒரு பலம்மிக்க பாலமாக அமையும்" என்று தெரிவித்துள்ளார். (கி)

## ஆண்டகையின் வருகை ஒத்திவைப்பு

(வவனியா)

அங்கிலிங்கன் திருச்சபையின் கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட் திரு சுவீதின் பெர்ணண்டோ ஆண்டகையின் வவனியா விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் இவரது விஜயம் இடம்பெறவிருப்பதாக வவனியா அங்கிலிக்கன் திருச்சபையினர் தெரிவித்திருந்தனர். இறுதிநேரத்தில் இவரது விஜயம் இரத்தாகியது.

## கிழக்குமாகாண அகதிகளுக்கு மே. ஜெர்மன் அரசு உதவி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள அகதிகளுக்கு நிவாரண உதவியாக மேற்கு ஜெர்மன் அரசாங்கம் நான்கு லட்சத்து 44 ஆயிரத்து 175 ரூபாவை இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (மா)

## 'குமுதம்' காணும் ஒரே ஒரு வேற்றுமை

"ஒரு வகையில் இந்தியப் பிரதமரையும் இலங்கை ஜனாதிபதியையும் எதிர் நோக்கியுள்ள முக்கியமான பிரச்னைகளிடையே ஓர் ஒற்றுமை தெரிகிறது. இலங்கை, இந்தியா இரண்டுமே ஜனநாயக நாடுகள். இங்கே சீக்கிய தீவிரவாதிகளினால் தொல்லை. அங்கே விடுதலைப் புலிகளின் கிளர்ச்சி. பிந்தரன்வாலே பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகள் காலிஸ்தான் என்ற தனிநாடு அமைக்கப் போராடுகிறார்கள். இலங்கை இரு கூறாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், வடக்கு, வட கிழக்குப் பகுதிகளைக்கொண்டு "தமிழ் ஈழம்" என்ற சுதந்திர நாடு உருவாக்கப்படவேண்டும் என்றும் "ஈழத்துப் போராளிகள்" பிடிவாதம் பிடிக்கிறார்கள். சீக்கியத் தீவிரவாதிகள் வழக்கமான அரசியல் நெறியினின்று வழுவி, கொலை, கொள்ளை, குண்டுவீச்சு ஆகிய முறைகளைக் கையாள்கிறார்கள். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் அப்படிப்பட்டவையே. பிரிவினைக்கு இடம் கொடுப்பதில்லை என்பதிலும், வன்முறையை ஒடுக்கவேண்டுமென்பதிலும் ரஜீவ் காந்தி உறுதியாக இருக்கிறார் ஜெயவர்த்தனவும் அவ்வாறே. வித்தியாசம் எங்கே வருகிறதென்றால், இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதனைச் சந்தேகமற நிரூபிக்கும் வகையில் எந்த சீக்கிய இனத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் இத்தனை கிளர்ச்சிகள் செய்கிறார்களோ அந்த இனத்தைச் சேர்ந்த ஜயில்சிங் நாட்டின் ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார் அதேபோல் சிங்களவரான ஜெயவர்த்தனா ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் அதேநேரத்தில் தமிழர் ஒருவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்படும் சூழ்நிலை அங்கே ஏற்படுமானால் அன்றே இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்ந்துவிடும்".

(இவ்வாறு 'குமுதம்' தனது 13-06-85 இதழில் "ஒரே ஒரு வேற்றுமை" என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது) (செ)

## சந்தேக நபர்கள் மீது பதினேழு வழக்குகள்!

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறை உடைப்பு, மட்டக்களப்பு கச்சேரி ஆயுதக்கொள்ளை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சந்தேகநபர்களுக்கு எதிராக பதினேழு வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்

இதேவேளையில் இந்த சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கோட்டை மஜிஸ்திரேட் ஜனாப் எம். இமாம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்

இவர்களுள் பொன்னையா கலாமோகன், சண்முகநாதன் சுந்தரலிங்கம் ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்

இவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்று அவர்கள் சார்பில் ஆஜரான திரு. குமார் பொன்னம்பலம் வாதிட்டதையடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் திரு ஈ. டபிள்யு தேவராஜா, திரு. கே. ரி. மகேந்திரன், எஸ். எச். எம் எ. சமன் ஆகியோரும் ஆஜரானார்கள்

அவசரகால தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 30 தமிழ் இளைஞர்களை திரு. குமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சந்தித்து சட்ட ஆலோசனை நடத்தினார்.

## கவிஞர் வீட்டுமுன் ஆர்ப்பாட்டம்

(சுண்டுக்குளி)

சட்டவிரோதமாக மின்சாரம் எடுப்பவர்கள் தொடர்பாக கவிதை எழுதியவரின் வீட்டு வாயிலில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கூடிநின்று கோஷமெழுப்பினர். தனிப்பட்டவர்களின் பெயர்களைக் கவிதையில் குறிப்பிட்டமைக்காக கவிஞர் வருத்தம் தெரிவித்ததாகத் தெரிகின்றது.

## மணிவாக்கு

செய் கருமத்தேயன்றிச் சேரும் பயன் தன்னில்
ஐய. உனக்கில்லை அதிகாரம்.
— பகவத்கீதை வெண்பா

# நமது நோக்கு

## பாரதம் பேசியது

அமெரிக்க - இந்திய உறவில் முன்னின்று மிளிர்வது சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் நடைபெற்ற முதலாவது சர்வமத பாராளுமன்றத்தில் ஆற்றிய பேருரை.

அமெரிக்க சகோதர சகோதரிகளே என்ற கர்ச்சனையுடன் ஆரம்பமான பெருமழை அமெரிக்காவில் மட்டுமல்ல பல ஐரோப்பிய நாடுகளில் சிவப்பயிர் வளர்க்க உதவியது.

கடந்த நூற்ருண்டில் வேரூன்றிய இத்தொடர்பு நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் அமெரிக்க பாராளுமன்றத்தில் - செனட்டும் மக்கள் பிரதிநிதிச்சபையும் இணைந்த - ஆற்றிய பேருரையில் ஒரு புதிய யுகத்துக்கு வழிகோலியிருக்கிறதெனலாம்.

அமெரிக்கா தூரமேற்கின் புதிய நாடு; ஆனுல் அரசியல் ஞானத்திலும் பொருளாதார மேம்பாட்டிலும் இன்று உலகின் மிகச் சிறந்த நாடாகத் திகழ்கிறது.

அமெரிக்காவின் முதல் ஜனுதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் ஒரு சிறந்த அரசியல்வாதி; சிறந்த விடுதலை வீரன் ஆபிரகாம்லிங்கன், ஜனநாயக லட்சியவாதி தோமஸ் ஜெபர்சன் போன்ற வீரர்கள் மட்டுமல்ல, ஆன்மீகத் துறையில் மகாத்மாகாந்திக்கே வழிகாட்டியாகவிருந்த அரசியல்ஞானி தோம்ரா அவருடைய குரு பெரும் சிந்தனையாளரும் கவிஞனுமான எமர்சன் போன்ற மகான்கள் வாழ்ந்த நாடு.

சுதந்திரத்தின் பெருமையையும் ஜனநாயக ஆட்சியின் சிறப்பையும் உலகுக்கெடுத்துரைத்த நாடு அமெரிக்கா. இந்தப் புகழ்மாலையுடன் தமது பேச்சை ரஜீவ் ஆரம்பித்தபோது சபை குதூகலித்து ஆரவாரித்தது. அமெரிக்க - இந்திய நட்புக்குப் புதுப்பலம் அளிக்கும் அறிகுறியாகும்.

இந்திய தேயிலேயே சுதந்திரப் போரை ஆரம்பித்ததென்று நகைச்சுவையுடன் பேசிய பாரதப்பிரதமர் Boston Tea Party என்ற சம்பவத்தைக் குறிப்பிட்டது இன்றைய அமெரிக்க இளம் சந்ததியினருக்குப் பெருஞ் சிரிப்பாய் இருந்தது.

அமெரிக்க சுதந்திரப் போர் மாதிரியல்லாமல் இன்று 70 கோடி மக்கள் வாழும் இந்தியாவுக்கு ஒரு புதுமுறை போராட்டத்தை அறிமுகப்படுத்திய மகாத்மா காந்தியை மிக உருக்கத்துடன் குறிப்பிட்டார்.

வன்முறை சமாதானத்துக்கு வழிவகுக்காது. காந்தியின் அஹிம்சைக்கு நாமெல்லோரும் திரும்புவதாலேயே இன்றைய உலகைப் பிளந்து கொண்டிருக்கும் போரையும் பகைமையையும் நீக்க முடியுமென்று ஆணித்தரமாக உரைத்தார் ரஜீவ்.

சுதந்திர இந்தியாவின் பலகோடி மக்களின் வறுமையை நீக்க நாட்டைக் கட்டியெழுப்ப பகீரதப் பிரயத்தனங்களை நன்ருகவிளக்கிய பாரதப்பிரதமர், விவசாயத்திலும், தொழிலிலும் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பம் அற்புத மாற்றங்களை ஏற்படுத்த வல்லது என்ருர்.

இந்தியாவுக்கு உதவும் தொழில்நுட்ப விஞ்ஞானம் இந்திய மக்களின் நன்றென்று காணவேண்டும்; அதேசமயம் இன்று இத்துறையில் முன்னிற்கும் அமெரிக்கா கடந்த காலத்தில் உதவியதுபோல இன்றும் உதவவேண்டுமென்று தெளிவான கோரிக்கை விடுத்தார்.

1949-ல் தமது பாட்டனுரின் அமெரிக்க விஜயத்தை குறிப்பிட்டபோது சபையின் ஆரவாரம் தணியுமளவுக்கு சில நிமிடங்கள் காத்திருக்க வேண்டி இருந்தது.

நேருவில் அமெரிக்க மக்களுக்கு சிறப்பான ஈடுபாடு இருந்தது. அட்லாய் ஸ்டீவன்சன் அவரை அழகாக அறிமுகம் செய்திருக்கிருர்.

''நமது காலத்தில் கடவுளின் மிகப்பெரிய படைப்புக்களில் நேரு ஒருவர். அவருடைய நாடும், அவர் கண்ட விடுதலைக் கனவும், மனிதாபிமான நல்லுறவும் என்றென்றும் அவருடைய நினைவுச் சின்னங்களாக விளங்கும்'' என்பது உறுதி என்ருர்.

நேருவும், இந்திராவும் பண்டைய இந்தியாவின் பெருமையில் ஊறியிருந்து. ஒருபுதிய வறுமை நீக்கப்பட்ட இந்தியாவை சமத்துவ தர்ம அடிப்படையில் கட்டி எழுப்புவதில் பெரு வெற்றி கண்ட தலைவர்கள்.

இன்று ஆட்சிக்கு வந்திருக்கும் ரஜீவ் பழமையைப் படித்தறிந்தவர்; புதிய இந்தியாவைப் பற்றி நேரில் புரிந்துகொண்டிருக்கிருர் என்பதே அவர் அமெரிக்க பாராளுமன்றத்தில் நிகழ்த்திய சரித்திரப் பெருமை பெற்ற பேச்சு எடுத்துக்காட்டுகிறது.

பரவலாகப் பல விரிவான கருத்துக்களை அலசிய ரஜீவ் சுருங்கச் சொல்வதில் சாமர்த்தியம் படைத்தவர் அன்னையைப்போல், பாட்டனைப்போல் உணர்ச்சிவசப்படாது விண்ணுலகில் விமான ஓட்டியாக இருந்தால், எங்கு உலாவினுலும் குறித்த ஒரு இடத்துக்கு விரைவாக வரும் ஆற்றல் படைத்தவரென்பது அவருடைய பேருரை நிரூபித்தது.

ஆயுதக் கட்டுப்பாடுபற்றி அதிகம் பேசாது அதனை அவசியப் படுத்தும் பிணக்குகள் அரசியல் தீர்வால் நீக்கப்படவேண்டும் என்ருர்.

மூன்ரும் உலக நாடுகள் இதனையே வற்புறுத்துகின்றன என்று முடிக்கும்போது ஆப்கான் பிரச்னையை அதற்கு உதாரணமாகத் தொட்டது இளைஞரின் ராஜதந்திர ஆற்றலைவெளிப்படுத்தியது.

### மகோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு அன்னுங்கை அருள்மிகு ஸ்ரீசிவ பூதவராயர் சுவாமிகள் கோவில் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆறு நாட்கள் வரை நடைபெறும்.

## யாழ். மக்கள் வங்கி அடகு நகைகள்: சில நாட்களில் இறுதிமுடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைத்த நகைகள் தொடர்பாகச் சில தினங்களில் இறுதிமுடிவு எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் வங்கிக் கிளையில் அடகுவைத்தவர்கள் அதற்குரிய பணத்தையும் வட்டியையும் செலுத்தி ஒரு வருடத்திற்கு மேலாகியும் நகைகள் வழங்கப்படவில்லை. நகைகள் பாதுகாப்பிற்காகக் கொழும்பில் வைக்கப்பட்டுள்ளது.

மக்கள், யாழ். பிரஜைகள் குழுவிடம் புகார்செய்ததைத் தொடர்ந்து இதுபற்றி மக்கள் வங்கி மேலிடத்திடம் தெரிவித்தபோது 'பாதுகாப்பு இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டது

யாழ் பிரஜைகள் குழுவினர் இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணசிங்காவைச் சந்தித்து இதுபற்றித் தெரிவித்தபோது 'நகைகளைக் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவருவதற்கும், முகாமிற்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கிளையில் வைத்து வழங்குவதற்கும் போதிய பாதுகாப்பு அளிப்பதாக அரசாங்க அதிபரின் பிரதிநிதி முன்னிலையில் உறுதியளித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் ஊடாக மக்கள் வங்கி பொதுமுகாமையாளருக்கு யாழ். பிரஜைகள் குழுவினர் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இக்கடிதம் பொதுமுகாமையாளருக்குக் கிடைத்திருப்பதாகவும், இதுபற்றி ஆராயப்பட்டுவருவதாகவும் தெரிய வருகிறது. (க)

# மக்கள் கருத்து

## ஒரு விளக்கம்

கடந்த சனிக்கிழமை வெளியான 'ஈழநாடு' இதழில் 5-ம் பக்கத்தில், ''கொள்ளைபோன பொருட்கள் திரும்பக் கிடைக்கவில்லை'' என்ற தலைப்பின் கீழ் வரும் செய்தியின் இறுதிப் பந்தி தொடர்பாக ஒரு சிறு விளக்கம்!

''இப்பகுதிப் பணம் வேறு நிதி நிறுவனங்களுக்கூடாக நாட்டின் மறுபகுதிகளை வளம்படச் செய்வதை தடுத்து இப்பகுதிப் பணத்தில் இப்பகுதியை வளம்படுத்தும் நோக்கமாகவே......'' என வருகிறது. இக்கூற்று பொதுவான உண்மையாகவும் மற்றும் எல்லா நிதி நிறுவனங்களுக்குப் பொருந்துவதாகவும் இருக்கமுடியாது என்பதனை விளக்க விரும்புகிறேன்.

எமது நிதி நிறுவனமான ''மேர்க்கண்டைல் கிறெடிட் லிமிட்டெட்'' தனது யாழ். கிளையினூடாகப் பெறப்படும் பணம் யாவற்றையும் இப்பகுதி வாடிக்கையாளரின் நன்மைக்காகவே உபயோகப்படுத்துகின்றதென்பதையும், மேலும் இப்பகுதி தேவைக்குப் பணம் பற்ருது போகும் வேளையில் கொழும்பில் தலைமை நிறுவனத்தின் பணத்தில் இருந்து பெரும்பகுதி எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிருேம்.

ஆ. வ. சர்மா
[கிளை முகாமையாளர்]

★

## மலாய இலங்கையர் பென்சனர்களுக்கு

மலாயன், சிங்கப்பூர் பென்சனர்களுக்கு இலங்கையில் மலாயா சிங்கப்பூர் பிறநாட்டு ஒய்வூதியத்திலிருந்து 1983 ஏப்ரல்மாதம்முதல் வரிவிலக்கு கிடைத்திருந்தும் இவ் வரி தொடர்ந்தும், கழிக்கப்பட்டது. அவ்வாறு கழிக்கப்பட்ட தொகையை தவருது மனுச்செய்து பெற்றுக்கொள்ள வேண்டுமென இவ் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு வற்புறுத்துகிருேம்.

மலாய - இலங்கையர் சங்க நிர்வாகம் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளையடுத்து இவ்வரிவிலக்கு 1983 ஏப்ரல் மாதம் முதல் கிடைத்தது. (1932ம் ஆண்டுமுதல் மலாயா, சிங்கப்பூர் ஒய்வூதியத்திற்கு வரி வசூலிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

வரிவிலக்கு கிடைத்த 1993 ஏப்பிரல்முதல் பென்சன் வவுச்சரிலிருந்து தொடர்ந்து பத்து மாத காலம்வரையும் வரி அறவிடப்பட்டது இறந்தவர்களின் பென்சனிலிருந்து அவர்கள் இறந்தமாதம் வரையும் வரி அறவிடப்பட்டது.

இவ்வாறு கழிக்ப்பட்ட தொகையை கச்சேரி வழங்கும் சேட்டிபிக்கெட்டிலிருந்து அறிந்துகொள்ளலாம். அந்த சேட்டிபிக்கேற்ருேடு வரிஇலக்கமும் (தெரிந்தால்) இட்டு கொழும்பு வருமானவரி இலாகாவுக்கு ஒய்வூதியம் பெறுபவர்களும் மரணமானவர்களின் உரிமையாளர்களும் மனுப்பண்ணி கழிக்கப்பட்ட தொகையை பெற்றுக்கொள்ளலாம். கடந்தகாலங்களில் இதுபோன்ற பணவருமதிகளுக்கு மனுச்செய்யாமையினுல் நஷ்டம் ஏற்பட்டமையை இங்கு நினைவுகொண்டு இம்முறை தவருது இந்த ஒய்வூதியம் பெறுபவர்கள் தம்மிடம் கழிக்கப்பட்ட தொகையை மனுச்செய்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

ஈ. வி. ராமநாதன்
செயலாளர்,
(மலாய இலங்கையர் சங்கம்,
யாழ்ப்பாணம்.)

## யாழ். விழிப்புலனற்ருேர் சங்க புதிய செயற்குழு உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் யாழ் விழிப்புலன் அற்ருேர் சங்கம் அண்மையில் கூடி ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட புதிய செயற்குழுவைத் தெரிவு செய்தது.

அகில இலங்கையிலும் வாழும் தமிழ் பேசும் கண்பார்வை அற்றவர்களின் நலனைக் கவனிப்பதற்காக இயங்கிவரும் ஒரே ஒரு ஸ்தாபன அமைப்பு யாழ். விழிப்புலன் அற்ருேர் சங்கமே என்பதும் இது கடந்த 76ம் ஆண்டு மே 23ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளை நிறைவு செய்து பத்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். விழிப்புலனற்ருேர் சங்கம், அதன் ஒன்பது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் திரு கா விஜயராஜசிங்கம் தலைமையில் தனது பொதுக் கூட்டத்தை நடத்தியது பல்வேறு நிகழ்ச்சியின் இறுதியில் 1985—87 ஆண்டுகளுக்குரிய புதிய செயற்குழு தெரிவு நடைபெற்றது.

செயற்குழுவின் தலைவராக திரு. கா. விஜயராஜசிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். திரு ஆ. ரவீந்திரன் செயலாளராகவும், செல்வி. வை. கேதீஸ்வரிபொருளாளராகவும் திரு ஆ மகேந்திரன் உபதலைவராகவும், திரு வி. கனகசபை உப செயலாளராகவும் திரு மு பாலசுப்பிரமணியம் இதழ் ஆசிரியராகவும் மற்றும் திருவாளர்கள் இரா. சிவகுமாரன் எஸ் வேலுத்தேவர்(ராஜா) செல்வி ஜோ. அருட்பிராகாசம் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும் பொதுச் சபையினுல் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ''வெளியேறியவர்கள தொடர்புகொள்க''

(வவனியா)

வவனியா - தச்சன்குளம் விமானப் படைத்தள எல்லைக்குள் இருந்துவெளியேற்றப்பட்டவர்கள் இம்மாத முடிவிற்குள் வவனியாபிரஜைகள்குழுத்தலைவர் சட்டத்தரணி திரு எக்ஸ். சொர்ணபாலாவைச் சந்திக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

வெளியேற்றப்பட்டவர்களுக்கு குடியிருப்பு, விவசாய நிலங்கள் வழங்கப்படவுள்ளது.

முன்பு இவ்விடயம் தொடர்பாகப் பிரஜைகள் குழுவிற்குப் புகார் தெரிவித்தவர்களும் தலைவருடன் தொடர்பு கொள்ளக் கோரப்பட்டுள்ளனர்.

இன்று
வட்டு. வீரபத்திர சிவன் கோவில் கொடி.

## அல்லல் தீர்ப்பாய் ஆலகால கண்டனே!

பல்கலையும் நிறையும் பாங்கான வட்டுநகரில்
வேல் விழியாள் உமையுடன் வீற்றிருக்கும்
வீரபத்திர சிவனே.
அல்லும் பகலும் அடிதொழும் அடியவர்
அல்லல் தீர்ப்பாய் ஆலகால கண்டனே.

சித்தமோடு சிறப்புமிகு சித்தாயர் வேதம் தன்னில்
வித்தகராம் வீரமைந்தன் அப்பா வளி யீந்த
சித்திர மோடு சிற்பமும் நிறை ஆலய மதில்
நித்தம் எழுந்தருளு வாய் நீல கண்டனே.

கூற்றவனை காலாலுதைத்த குன்றப் பொருளே
குற்றமில்லா நெஞ்சில் குடியிருக்கும் அருளே
வற்ருத அன்போடும் வழிவந்த பண்போடும்
உன்தாள்
பற்றுகிருேம் ஏற்றருளுவாய் பார்வதி மணளனே.

—செ. சுப்பிரமணியம்.

# 11 பேர் தாயகம் திருப்பப்பட்டனர்!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வேலை வாய்ப்புப் பெற்று மத்திய கிழக்கு நாடென்றுக்கு (பாஹ்றினுக்கு) சென்ற ஒரு பெண் உட்பட 11 பேர் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

விசா இல்லாததாலேயே அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்களி—மிருந்து குறிப்பிட்ட ஏஜன்ஸி தலா 30 ஆயிரம் ரூபா வாங்கிக் கொண்டே அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்களாம்.

## மீண்டும் ஆரம்பித்தனர்

[சாவகச்சேரி]

தீவிரவாதக் குழுவொன்றின் பிரசுரமொன்றில் கோரப்பட்ட பிரகாரம் கசிப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டவர்கள் அவ்வுற்பத்தியைச் சிறிதுகாலம் கைவிட்டனர். பின்னர் மீண்டும் கசிப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# இந்து இளைஞர் மாணவர் பேரவை

(ஏழாலை)

ஏழாலை இந்து இளைஞர் மாணவர் பேரவையின் பொதுக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் மாசியப்புலம் ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் செல்வன் சிவரூபன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு எம். தருமமூர்த்தி, செல்வன்கள்: மா.ஜெயசீலன் ரவீந்திரன் செல்வி பொ. கண்ணிகா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். 'வன்றெண்டர்' புராண நாடகம், 'எனக்கும் கல்யாணம்' ஆகிய நாடகங்களும் இடம்பெறவுள்ளன. (மா)

# வடக்கு, கிழக்கில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன விரும்புகிறார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டு சர்வகட்சி மாநாடு கைவிடப்பட்டதனால் முறிவடைந்த பேச்சுவார்த்தைகளை அதே இடத்திலிருந்து மீண்டும் தமிழ் தலைவர்களுடன் நடத்த விரும்புகிறார். வேறு கோணத்தில் சொல்வதானால் சர்வகட்சி மாநாட்டில் தான் சமர்ப்பித்த ஆலோசனைகளின் அடிப்படையில் மாகாணங்களுக்கு படிப்படியாகவே மேலதிக அதிகாரங்கள் கொடுக்க விரும்புவதாக தெரிகிறது.

பிரதேச சுயாட்சி தனிநாட்டுக்கு முன்னோடியாக அமைந்துவிடுமென இலங்கையின் பெருந்தொகை சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என கருதுவதலேயே ஜே. ஆர் இச்சொற்றொடரை பாவிப்பதில் அவதானமாக இருக்கிறார்.

தமிழ்மக்களின் பிரச்னைக்கான அணுகுமுறையில் இதுவே தடையாக இருக்கிறது.

இதன் காரணமாகவே அவர் பாராளுமன்றத்தில் இரண்டாவது சபையுடன் கூடிய மாவட்ட மாகாணசபைகள் என்ற சொற்றொடரை தொடர்ந்தும் பாவித்துவருவதில் அக்கறையாக இருக்கிறார்

வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்ற தமிழ் மக்களின் வற்புறுத்தலுக்கு அவர் அடிபணிந்து விட்டாரென சிங்கள மக்கள் நினைப்பதைத் தவிர்ப்பதற்காகவே அவர் இவ்வாறு நடந்துகொள்கிறார்.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அச்சத்தைப் போக்கும் வகையிலேயே இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதை இந்தியா ஏற்றுக்கொள்ளாது என்றும் இந்தியா கூறுகிறது.

ஜனாதிபதி ஜே. ஆரும் அவரது சகாக்களும் உத்தேச மாவட்ட மாகாண இரண்டாவது பாராளுமன்ற சபைகளுக்கு எவ்வளவு தூரம் உள்ளூர் அமைச்சரவையுடன் கூடிய நிர்வாக, சட்ட, நிதி, நீதி அதிகாரங்கள் வழங்குவார்களென்பது அவர்களது நேர்மைக்கு உண்மையான ஒரு சோதனையாகும் என்று 'இந்து' தெரிவித்துள்ளது

# தமிழ் ஊழியர் இடமாற்றம்

[மட்டக்களப்பு]

மன்னம்பிட்டி ரயில் நிலையத்தில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்கள் அச்சம் காரணமாக தொடர்ந்து அங்கு கடமையாற்ற மறுத்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதற்கான அனுமதியை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொகமட் வழங்கியதைத் தொடர்ந்தே மட்டக்களப்புக்கு அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச அதிபருக்கு நினைவு அஞ்சலி

[வவனியா]

அகால மரணமான வவனியா உதவி அரச அதிபர் ஆ. குணநாயகம், பிரதம லிகிதர் திரு என். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரது அந்தியேட்டி கிரியைகள் அவர்களது சொந்த ஊர்களான மறையே சரவணை, அளவெட்டியில் எதிர்வரும் 15ம் திகதிகளில் இடம்பெறும்.

இவர்கள் கடந்த மாதம் 15ம் திகதி மிகிந்தலையில் அகால மரணமானது தெரிந்ததே. கிரிகையில் கலந்து கொள்வதற்காக வவனியா கச்சேரி உயர் அதிகாரிகள் சிலர் செல்லவுள்ளனர்.

அதேவேளையில் மேற்படி இருவரது நினைவுமலர் ஒன்றும் வவனியாவில் வெளியிடப்படவிருக்கின்றது.

மலர் வெளியீடும், அத்துடன் நினைவு கூட்டமொன்றும் இம்மாத இறுதியில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இப்படியும் ஒரு கடத்தல்

(கொழும்பு)

வெளிநாடொன்றிலிருந்து கொள்கலனில் கடத்திவரப்பட்டதாகக் கூறப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான புடவை வகைகள் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மின்சார உபகரணம் என்ற பேரில் இப்புடவைகள் அனுப்பி வைக்கப்பட்டனவாம்.

இக் கடத்தலில் அரசியல்வாதியொருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகத் சந்தேகிக்கப்படுகிறது (மா)

# வீடியோ புளொசம்ஸ் புதியவெளியீடு

மாய மோகினி V G P

சிவப்பு நிலா (பிரமிட்)

ஜெய்சங்கர், சுஜாதா, சந்திரசேகர்.

குடும்பம்

விஜயகாந்

தரமான படப்பிரதிகளை வாடகைக்கு பெறுவதற்கும், கலர் புகைப்படங்களை ஐந்துநாட்களில் பிரதி பண்ணுவதற்கும் தொடர்புகொள்ளுங்கள்:—

ரூபநிதி ஸ்ரோர்ஸ்,

C. S. K. கட்டிடம், சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம்.

வீடியோ புளொசம்ஸ்.

30' சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம், T P. 24277

(3818)

# தொடரும் கல்வீச்சு சம்பவங்கள்!

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நோக்கிவந்த சில தனியார் பஸ்கள் கல்வீச்சுக்கிலக்கான தால்கண்ணாடிகள் சேதமடைந்ததாகவும் சில பிரயாணிகளுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்துக்கு அண்மையில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது

கல்வீச்சுக்கும், தாக்குதலுக்கு முள்ளான சில பஸ்கள் நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் யாழ் நகர் வந்து சேர்ந்தன பாதுகாப்புக்காகசில முறிகண்டிப் பகுதியில் தரித்து நின்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

# பலாலி முகாமில் மருந்துகள், 'ஒட்சிசன்'

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியமருந்து வகைகள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை ஆஸ்பத்திரிக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பிலிருந்து கடந்த 3 நாட்களுக்கு முன்னர் கப்பல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட மருந்து வகைகளும், நேற்று விமானமூலம்கொண்டு வரப்பட்ட (சத்திர சிகிச்சை செய்வதற்குப் பாவிக்கப்படும் பிராணவாயு சிலிண்டர் உட்பட) பலாலி இராணுவ முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

இந்த மருந்து வகைகள் இன்று யாழ். ஆஸ்பத்திரிவந்து சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

# சேவைநலம் பாராட்டு

(மானிப்பாய்)

"தம்மிடம் கல்விபயிலும் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் சில ஆசிரியர்கள் நன்கு அறிந்துவைத்திருப்பார்கள். இவர்களுள் ஒருவர் திரு தம்பையா என்று யாழ். ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றி இளைப்பாறிய ஆசிரியர் திரு. தம்பையாவின் சேவையைப் பாராட்டிப் பேசிய பாடசாலை அதிபர் திருமதி பி. கந்தசாமி எடுத்துக் கூறினார்.

பா. சாலை மண்டபத்தில் நடைபெற்ற இப் பாராட்டு வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில், ஒப்படைக்கப்பட்ட வேலைகளை முகம் கோணாது செம்மையாகச் செய்துமுடித்தவர் திரு. தம்பையா என்றும் மாணவர்கள் பால் அவர் காட்டிய அக்கறையே இதற்குக் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு க. கணேசலிங்கம் பேசுகையில், திரு தம்பையாவின் பொறுமையான குணம் எல்லோரது மனத்திலும் அவருக்கு நல்லதொரு இடத்தைத் தேடிக் கொடுத்துள்ளது என்றார்.

திரு தம்பையா தாம் சேவையாற்றியபோது அதிபர் உட்பட சகல ஆசிரியர்களும் தமக்கு மிகவும் ஒத்துழைப்புத் தந்தமைக்கு தாம் மிக்க நன்றிகூறுவதாகத் தெரிவித்தார்.

அதிபர். ஆசிரியர்கள் சார்பில் திரு. தம்பையாவுக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.




## மாணவ மணிகளே!

தரித சலவைக்கும்
சீருடை வெளுப்புக்கும்
பாவியுங்கள்

### மில்க்வைற் சலவைப்பவுடர்

பாவிக்க. பெரிய வெற்றுப் பெட்டி 1 அல்லது பொலிதீன் சிறிய சலவைப் பவுடர் பைக்கற் 10 அனுப்பி அழகிய பொலிதீன் பாக் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

—மில்க்வைற், யாழ்ப்பாணம்.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி

## வெற்றுச் சாக்கு / கழிவு பொருள் விற்பதற்கான

# கேள்வி விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தின் இருப்பில் உள்ள பின்வரும் வெற்றுச் சாக்கு, கழிவுப் பொருள் விற்பனைக்கு கேள்வி விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகிறது கீழ்க்கண்ட பொருட்களுக்கு கேள்வி விண்ணப்பம் அனுப்ப விரும்புவோரும் கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தில் ரூபா 10/- செலுத்தி, விண்ணப்பப் படிவம் பெற்று, மீளப்பெறும் வைப்பாக வெற்றுக் சாக்கெனில் ரூபா 250/-ம், கழிவுப் பொருளாயின் ரூபா 100/-ம் செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இலக்கத்தையும் குறிப்பிட்டு, 22 6-85ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்கு / கழிவு பொருள் விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு ப நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும் சாக்குகளையும், கழிவுப் பொருளையும் பார்வையிட விரும்புவோர் எந்த வேலை நாட்களிலும் தலைமைக்காரியாலயம் வந்து பார்வையிடலாம். விண்ணப்பதாரிகள் முன்னிலையில் 25 6-85ம் திகதி பகல் 10-00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் உடைக்கப்படும். எனவே, அன்றைய தினம் சங்கக் காரியாலயத்தில் நேரில் சமுகம் அளித்தல்வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் 29-6-85 பகல் 12-00 மணிக்கு முன் முழுப் பணத்தையும் செலுத்தி வெற்றுச் சாக்கு / கழிவு பொருளை அப்புறப்படுத்த வேண்டும்.

வெற்றுச் சாக்கு மாத்திரம் பெறவிரும்புவோர் அதற்கு தனியாக விண்ணப்பம் அனுப்பலாம் கழிவுப் பொருள்பெற விரும்புவோர் அதற்கும் தனியாக விண்ணப்பம் அனுபபலாம். இரண்டும் கொள்வனவுசெய்ய விரும்புவோர் ஒரே படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

### வெற்றுச் சாக்கு விபரம்

| | |
|---|---|
| மாச் சாக்கு | 3880 |
| 2 1/2 புசல் சாக்கு 1 | 8 35 |
| சீனிச் சாக்கு பெரிது 100 கி. கி. | 655 |
| சீனிச் சாக்கு சிறிது 50 கி. கி. | 1575 |
| அரிசி சாக்கு 2 புசல் | 2375 |
| கழிவு 1 | 495 |
| நவதானியம் | 110 |
| பெரிய பை | 819 |
| சிறிய பை | 33 |
| கண்ணறை | 45 |
| | 18222 |

### கழிவு பொருள் விபரம்

| | |
|---|---|
| சீனி-கழிவு | 300 கிலோ |
| மா-கழிவு | 1150 கிலோ |

பொது முகாமையாளர்.

13-6-85.

3817

# றமழான் சிந்தனை

இஸ்லாத்துக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கல்வியோடு பின்னப்பட்ட மதம் இஸ்லாம் ஒருவன் குர்ஆனை ஆராய வேண்டும். பெருமாஞர் ஸல்) அவர்கள் வாழ்வை ஆராய வேண்டும். இஸ்லாம் தரும் கொள்கைகளை உணர வேண்டும்.

பின்னர் அவை அனைத்தையும் செயலில் கொண்டு வரவேண்டும்! இதைத்தான் குர் ஆன்: அறிவைக் கொண்டு செயல் படுங்கள் கல்வியைக் கொண்டு சிந்தியுங்கள். திருஷ்டாந்தங்களைக் கொண்டு உணருங்கள் என்று கூறுகிறது. கல்வியில்லாமல் அறிவில்லை அறிவில்லாமல் விளக்கமில்லை. இதனுல் எப்படி நமது ஈமான் நிறைவு பெறும். இஸ்லாம் ஏகத்துவத்த வணக்கத்தை எந்தளவு தூரம் வற்புறுத்துகிறதோ அந்தளவு கல்வியைக் கற்கவும் வற்புறுத்துகின்றது. கல்வியைக் கொண்டு தான் நல்லுபதேசம் புரிந்து அல்லாஹ்வின்பால் அழைக்கலாம் கல்வியைக் கற்று அறிவை பெருக்குமாறு அல்லாஹ் திருகுர்ஆனில் 500க்கு மேற்பட்ட இடங்களில் கூறியுள்ளார் கல்வியின் அந்தஸ்தை இறைவன் வானளாவ உயர்த்துகின்றான்!

எனவேதான் நாயகத்தோழர்கள் கல்வியைச் கற்பதில் அதிக ஆர்வம் காட்டினர்கள். அவர்கள் உலகில் எபபக்கம் சென்ருலும் ஒரு கரத்தில் குர் ஆனையும் மறு கரத்தில் பெருமாஞர் (ஸல்) அவர்கள் முன்மாதிரிகளையும் கொண்டு சென்றர்கள். முஸ்லீம்கள் கற்றுக் கொள்ளக் கூடிய முக்கியமான ஆரம்பக்கல்வி எது? படைத்தவன் ஒருவன்! அவனே வணங்குவதற்குரியவன்; வழிகாட்டி ஒருவர்! அவரே நபிமணி (ஸல்) அவர்கள். வேதம் ஒன்று அது தான் குர்ஆன் அதன் வழி தனிவழி தர்மவழி அந்தவழிதன் சிறந்தது என்ற திட்டபடி மனிதன் கல்வியைக் கற்கவேண்டும். நாம் நமது எதிர் காலத்தை உற்று நோக்க வேண்டும். நமதுவருங்கால சந்ததிகளை எண்ணிப் பார்க்க வேண்டும்! முஸ்லிம்களாக பிறந்த அவர்களை முஸ்லீம்களாக வாழச் செய்யவேண்டும். நடையிலே, உடையிலே, பேச்சிலே, பழக்கவழக்கங்களிலே, இஸ்லாமிய கல்வியை ஊட்டிவிட வேண்டும்.

இஸ்லாமிய ஞானம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்! பாலர் பருவத்திலே அவர்கள் வாயிலிருந்து தம்பிசொல்லடா ஆ+டு — ஆடு, மா+டு— மாடு என்று சொல்லச் செய்து அவர்களை ஆடுகளாக மாடுகளாக ஆக்காமல் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறி பிஸ்மில்லாஹ்வை சொல்லச் செய்து மதக்கல்வியை அலிப்-பே- தேயிலிருந்து தொடங்கி ஈமானின் ஆணிவேரை அந்த பிஞ்சு உள்ளங்களில் பதிய வைத்தால் இன்ஸா அல்லாஹ் அவன் வீட்டுக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டப்படக் கூடியவனுக ஆகிவிடுவான்.

—தொகுப்பு: அ. க. அக்பர் ஜின்ன.

அடகுநகை:

## மக்கள் வங்கி தலைவருக்கு கோரிக்கை

(வவனியா)

வவனியா மக்கள் வங்கியில் அடகுவைக்கப்பட்ட நகைகளை கொழும்பில் வைத்து உரியவர்களிடம் வழங்கும்படி வவனியா பிரஜைகள் குழுத் தலைவர் மக்கள் வங்கித் தலைவரைக் கேட்டுள்ளார்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி.ப.2-30, 4-30
THE NEW
BLCK EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30,
சிவாஜி-பிரபு-சுஜாதா
நேர்மை

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

ஸ்ரான்லி மினி
(சினிமா)
5'X5' திரையில்
10-30, 2-15, 4-15
DIVINE EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

சிவன் மினி சினிமா
K. K. S. ரோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
11-6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
JULIA
கண்டிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா நடித்த
ஆயிரம் வாசல் இதயம்
(சன்மனகலர் புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
மௌன கீதங்கள்
(சுஸ்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00, 4-15
007 Roger Moore in
THE FICTION MAKERS
ஜேம்ஸ் பொண்ட் நவீன ஆயுதங்களுடன் மிகப் பயங்கர பயணத்தைச் சித்திரிக்கும் ஓவியம்.

நியூசாந்தி (மினி)
யாழ். சாந்தி சினிமாவில்
10 30, 2-30
சிவாஜி... பண்டரிபாய்... (இருவேடம்) சுந்தரராஜன் உஷாநந்தினி
கௌரவம்
(புதிய பிரதி)

மொடேர்ண் மினி சினிமா
(ஸ்ரீலங்காஅச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
நன Nana
இளம் உள்ளங்களை ஏங்க வைக்கும் காதல் காவியம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

ஆனந்தி வீடியோ சினிமா
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
பிரகாஷ், சக்கரவர்த்தி, ராஜான் நடித்த
டிஸ்கோ டான்சர்
இப்படத்திலிருந்து தழுவி எடுக்கப்பட்ட படம் தான் பாடும் வானம்பாடி
(இந்தி—கலர்)

குமரன் மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30 12-30 2-30, 4-15
EMMANUEL KISS ME
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்


## நியமனம்

(பண்டத்தரிப்பு)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தலைமைப் பீட நிறைவேற்று அதிகார சபையின் உறுப்பினராக இம் மாதம் தொடக்கம் மூன்று வருடங்களுக்கு படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார். படையின் தலைவர் திரு மலரி இ. விஜயசிங்கா இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

## 'குமுதினி' ஊழியர்கள் குடும்பம் நிர்க்கதி!

[கொழும்புத்துறை]

நெடுந்தீவுப் படகுக்கொலைச் சம்பவத்தில அப் படகைச் சேர்ந்த ஐந்து ஊழியர்கள் கொலையுண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அவர்களின் குடும்பங்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

'குமுதினி' என்ற அப்படகில் வேலைசெய்த அந்த ஐந்து ஊழியர்களும் பெருந் தெருக்கள் திணைக்களத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். ஆயினும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாது தொழில் புரிந்தனர்.

இதனால் அந்த ஊழியர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் சகாயநிதி போன்றவற்றைப் பெறமுடியாதுள்ளனவென்று நெடுந்தீவுப் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து யாழ் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றையும் அக்குழு அனுப்பிவைத்துள்ளது.

அந்த ஐந்து ஊழியர்களும் கடந்த ஏழு வருடங்களாக அப்படகில் பணியாற்றி வந்துள்ளனரென்றும், அப்படகில் போக்குவரத்து வேலைகளை அவர்களே கவனித்து வந்தனரென்றும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டு, அவர்களின் குடும்பங்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (கி)

## சுன்னாகம் பிரஜைகள் குழு

சுன்னாகம்)

சுன்னாகம் பிரஜைகள் குழு இன்று சனிக்கிழமை தலைவர் திரு தி மாணிக்கவாசகர் தலைமையில் கூடுகிறது.

நெடுந்தீவுப்படகுப் பிரயாணிகள் கொலை விஷயத்தில் நீதி வழங்க அரசு தவறிவிட்டமைக்காக கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் குறித்தும் சுன்னாகம் சந்தையில் பொருட்களை நுகர்வோரும் விவசாயிகளும் திர்நோக்கும் கஷ்டங்களைப் போக்க எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது.

பாடசாலை பஸ் சேவை துண்டிக்கப்படுவதால் பாதிப்படையும் மாணவர்களின் நலனைப் பாதுகாத்து - பாடசாலை பஸ் சேவை மட்டுமாவது சீராக இயக்குமாறு வ பி போ, சபையை கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் கொண்டுவரப்பட உள்ளது

## ஒரு சம்பவம்: சேதமில்லை

[யாழ்ப்பாணம்]

புளியங்குளத்துக்கண்மையில் கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இதனால் எந்த ஒரு வாகனத்திற்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)


## பத்திரிகைத்துறை பயிலுநர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்ப் பத்திரிகையொன்றின் ஆசிரிய பீடத்தில் பயிலுநர்களாகப் பணியாற்றுவதற்கு ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நன்கு தேர்ச்சியுள்ள, பத்திரிகைத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகுதி மற்றும் நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 3809,
C/O, 'ஈழநாடு',
தபாற்பெட்டி இல: 49 — யாழ்ப்பாணம்.
(3809)

## Science Academy

15, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
(புறக்டர், பாலசிங்கம் வளவு)

A/L 86, 87 புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 15-06-85.

விலங்கியல்: தம்பிராசா.
தாவரவியல்: சர்வா-பாலா.
பௌதிகம்: மணியம்-சிறி
இரசாயனம்: சத்தீஸ்
தூய-பிரயோககணிதம்: வெக்டர்

(யாழ் இந்து, இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையில்.)

## HOME FINANCE LTD.

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்
பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக
சீத்தை — பப்ளின் — பீசாமா
போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகய விலை.
விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.
NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

## ஆசிய மக்களின் உந்து சக்தி

ரஷ்ய அக்டோபர் புரட்சி மனித இன வரலாற்றில் லேயே புதியதோர் சகாப்தத்தை, சோஷலிஸ சகாப்தத்தை மலரச் செய்தது. காலனியல் ஒடுக்கு முறையிலிருந்து சகல மக்களையும் விடுதலையின் சகாப்தத்தை அது தோற்றுவித்ததோடு வெற்றிவாகை சூடிய தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கு வழிசமைத்தது.

குழு வாழ்க்கையிலிருந்து, மானியமுறைச் சமூகத்திலிருந்து, காலனியல் வாதத்திலிருந்து, ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை விடிம சனம் பெறுவதற்கான போராட்டத்தில் குதிக்கையில் அக்டோபர் புரட்சி ஆசிய மக்களுக்கு உந்து சக்தியாய் அமைந்தது.

இவை பற்றி அறிய இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் சட்டத்தரணியுமான தோழர் த துரைசிங்கம் எழுதிய "லெனினும் ஆசியாவும்" என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கில பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும்.
விலை ரூபா 10/-
சோஷலிஸ ஆய்வுக் கழகம்,
31, வில்சன் வீதி, கொழும்பு—12.
(3794)

## பேர்லின் பிரயாணம்

JUNE 17, 21, 25 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

யாழ்-கொழும்பு-பங்கொக் வரை எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட் பொண்ட், விசா அனைத்துக்கும்

லிப்ரஸ் லிமிட்டெட்,
R. G. பில்டிங், 70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

COLOMBO
LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளூயிட்
மலிவான விலைக்கு போதியளவு பெற்றுக்கொள்ளலாம்
STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID
விநியோகஸ்தர்கள்:-
டீமோ இன்டஸ்றீஸ் லிமிடெட்
65, ஜேதவன வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி: 23702-4, 34751
தயாரிப்பு:
கெமினெக்ஸ் லிமிட்டெட்


450 மிலி — ரூ. 27/25
250 மிலி — ரூ. 15/45

# "தமிழ் தீவிரவாதிகள் ஒரே நோக்கத்திற்காக போராடுகிறுர்கள் சிங்களமக்களுக்கு எதிராக அல்ல"

## பிரதி நீதி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

''அநுராதபுரத்தில் அண்மையில நடந்த துரதிர்ஷ்ட சம்பவங்களுக்கும் தமிழ் தீவிர வாதிகளுக்கும் தொடர்பு உண்டு என்பதற்கான தெளிவபன ஆதாரங்கள் எதுவும் இல்லை.''

பிரதி நிதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா கண்டியிலுள்ள வட்டுப்புளுவ கிராமிய விழிப்புக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர், அக்கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்துக் கூறியதாவது: ''கண்டியில் உள்ள சிங்களமக்கள் அச்சமடையத் தேவையில்லை; கண்டியிலுள்ள பொதுமக்களைத் தாக்கத் தமிழ் தீவிரவாதிகள் வரமாட்டார்கள்.

''தமிழ் தீவிரவாதிகள் ஒரு நோக்கத்திற்காகப் போராடுகிறுர்களேயன்றிச் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை''

''நாட்டின் இனப்பிரச்னைக்குச் சர்வகட்சி மகாநாட்டில் ஜனுதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தஞ சமர்ப்பித்த இணைப்பு 'சி' யில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை அமுல்படுத்துவதே சிறந்த தீர்வாக இருக்கும்.''

''கண்டியில் உள்ள சிங்கள மக்களுக்குத் துட்பாக்கிகளோ அல்லது வேறு ஆயுதங்களோ வழங்குவதன் மூலம் பிரச்னையைத் தீர்க்கமுடியாது. தமிழ் தீவிரவாதிகளையிட்டு அப்பாவிச் சிங்கள மக்கள் பயப்படுவதற்கு எவ்வித காரணமும் இல்லை.''

''இந்தியாவில் நடந்த ஐ. நா. மகாநாட்டில் கலந்து கொண்டபோது பல இந்திய அமைச்சர்களையும், பிரமுகர்களையும் சந்தித்தேன். இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறுர்கள் என்றும், ஆயிரக்கணக்கானோர் சித்திரவதை செய்யப்படுவதாகவும் நினைக்கிறுர்கள். இங்கிருந்து சென்றுள்ள அகதிகள் பிரச்னை அவர்களுக்குப் பெரும் பாரமாக இருக்கிறது. இந்த நிலைமைக்குத் தீர்வுகாண உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று இலங்கை அரசை அவர்கள் குறை கூறுகின்றனர்.''

இணைப்பு 'சி' பிரச்னைக்குச் சிறந்த தீர்வாக இருக்கும் துரதிர்ஷ்டவசமாக இதனை அரசாங்க எம் பிக்கள் எதிர்த்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனல் அதுபற்றி மீளாய்வு செய்யவேண்டிய கட்டம் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது''

'எம். பி மார்களுக்கு நிர்வாக அதிகாரம் வழங்குவது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதுபற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்றுர். (க)

### வயோதிப மாது படுகொலை!

(வேலணை)

வேலணை மேற்கில் வயோதிபப் பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு வாள்வெட்டுக்குப் பலியாகியுள்ளார்.

### மீண்டும் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையில் ஆஸ்பத்திரி வீதி — கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில் ஒரு கடைக்குள் நுழைந்த ஒருவர், கண் இமைக்கும் நேரத்தில் தமது சைக்கிளைப் பறிகொடுத்துள்ளார்!

தமது 'ரலி' சைக்கிளில் உள்ள பையில் தமது பெயர் விலாசமுள்ள அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதென்றும், ஜூலை கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு சிரமத்துடன் வாழ்க்கையைக் கொண்டு செல்வதாகவும் சைக்கிளை பறிகொடுத்த இ. பரமநாதன் தெரிவிக்கிறுர்.

### நெருக்கடியை சாதகமாக பயன்படுத்துவோம் 'ரெலோ' கூறுகிறது

[யாழ்ப்பாணம்]

''ஸ்ரீலங்கா இனவாத அரசுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் இன்று சர்வதேச ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளைத் தகர்த்தெறியும் போராட்டமாகப் பரிணமித்துவிட்டது. இதனுல் நாம் ஏகாதிபத்தியங்களையும் உடைத்தெறியும் பணியில் இறங்கியுள்ளோம். எனவே தான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை இலகுபடுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்'' என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது ஸ்ரீலங்கா அரசை போலித்தனமான அரசியல் தீர்விற்கு நிர்ப்பந்திக்கிறது. தமிழீழம் என்ற நிலையிலிருந்து இம்மியளவும்விலக முற்படாத நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கு ஏற்பட்ட இந்நெருக்கடியை எமக்கு சாதகமாக்கி தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்போம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

### ஒருவர் பலி

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழையில் நடந்த வான் விபத்தில் மயிலிட்டியைச் சேர்ந்த சேனுதிராசா நல்லதங்கம் [60 வயது] பலியானுர் (க)

### இன்று பனை வள கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பனை வள ஆய்வுக் கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார்.

பனை அபிவிருத்திசபைத் தலைவர் திரு. க. நடராசா ஆரம்பவுரை நிகழ்த்துவார் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிப்பார்கள். (க)

### யாழ்.தேவி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போதும், எவ்வித சோதனையும் நடைபெறவில்லை.

'யாழ்தேவியில்' ஆயுதப் படையினர் எவரும் வரவில்லை யாழ். ரயில் நிலையத்திற்கும் நண்பகல் ஆயுதப்படையினர் வரவில்லை.

குருநாகலை, பொல்காவலை, அநுராதபுரம், மதவாச்சி, வவனியா ரயில் நிலையங்களில் ஆயுதப் படையினர், கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

வழியில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என்றும் எந்த இடத்திலும் கல்வீச்சு நடைபெறவில்லையென்றும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

11 பெட்டிகளுடன் வந்த யாழ்தேவியில், ஒரு சிறுவன், ஒரு வயோதிபர் உட்பட 25 பேர் சென்றனர். யாழ் ரயில் நிலையத்தில் 14 பேர் மட்டும் வழியனுப்ப வந்திருந்தனர் பயணம் செய்தவர்களில் 19 பேர் கொழும்பிற்கும் ஒருவர் வியாங்கொடைக்கும் மூன்று பேர் வவனியாவிற்கும், ஒருவர் மட்டக்களப்புக்கும் சென்றனர். வாரண்டில் ஒருவர் 2-ம் வகுப்பில் பயணம் செய்தார். இந்த 25 பேரில் மூவர் மூஸ்லிம்களாகும். பெண்கள் எவரும் செல்லவில்லை.

கடைசி நேரத்தில் ரயில் நிலையத்துக்கு வந்த இந்த முஸ்லிம் இளைஞர்கள் பின்னர் ஸ்ரேடியத்திற்குச் சென்று டிக்கட்டுக்கான பணத்தைச் செலுத்தி 'ரசீது' பெற்று வந்து டிக்கட் எடுத்து பயணம் செய்தனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த சிலரும் ஸ்ரேடியத்திற்கு நேற்றுக்காலை வந்து டிக்கற்றுக்கான பணம் செலுத்தி ரசீது பெற்றுச் சென்றதாக ரயில் பகுதி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரேடியத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-45 மணி வரை டிக்கட்டுக்கான ரசீது வழங்கப்படும் என்றும் பயணம் செய்பவர்கள் அன்றைய தினமே ரசீது பெற்று டிக்கட்டை எடுக்கவேண்டுமென்றும் அவர் கூறினுர்.


### மரண அறிவித்தல்

### திருமதி ஐயம்பிள்ளை சோதிப்பிள்ளை

தலையாளி

இவர் காலஞ்சென்ற இளையதம்பி ஐயம்பிள்ளையின் அருமை மனைவியும் திருவாளர் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற தருமலிங்கம், காலஞ்சென்ற குணரத்தினம், அமிர்தலிங்கம் சூரியநாராயணன் ஆகியோரின் அருமைத் தாயாரும், தெய்வானைஅம்மா (ஞானம்), நாகேஸ்வரி ராசலட்சுமி, இராஜேஸ்வரி, மீனலோசனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை இன்று (15-6 85) அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: சிவசுப்பிரமணியம்.
சபாபதி வீதி, யாழ்ப்பாணம். (3805)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவிக் மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu, Telephone, 22389-24126.

## இப்படியும் நடக்கிறது

அபுதாபியில் வேலைபார்த்த அந்த இளைஞர்; தாயகம் வந்து, விடுமுறை கழித்து, மீண்டும் அபுதாபி திரும்பினுர்.

அபுதாபி விமான நிலையத்தில் வழக்கமான சோதனை நடைபெற்றபோது, அவரது கைப்பையும் பலத்த சோதனைக்குள்ளானது.

அந்தச் சின்னப்பை ஒரு கட்டத்தில் 'சாடையாக'க் கிழிந்து விடவே, அதிலிருந்து வெண்ணிறப் பொருள் கொட்டத் தொடங்கி விட்டது.

சுங்க அதிகாரிக்கு 'பொத்' என்று கோபம் வந்து விட்டது! என்ன நினைத்தாரோ தெரியவில்லை. ஆ... ஊ' என்று அலறிய அவர் கண்கள் கோவைப்பழம் போல் சிவக்க... அந்த இளைஞரை 'கொறு கொறு' வென்று அழைத்துச் சென்று அறையொன்றில் அடைத்து விட்டு 'எச்சரிக்கை மணி'யை ஒலிக்க வைத்துக் கொண்டே உயர் அதிகாரியிடம் ஓடினுர்.

அடுத்த கட்டம்: சுங்கப்பகுதி நிபுணர்கள், இரசாயன பரிசோதனை உயர் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர் அந்தச் சின்னஞ்சிறிய பையிலிருந்த வெண்ணிறப் பொருள் மிகவும் நுணுக்கமாகப் பரிசோதனை செய்யப்பட்டு முடிவில்; அந்தப் பொருளில் எந்தவிதமான தீங்கும் இல்லை என்று ஊர்ஜிதப் படுத்தப்பட்டதும், அந்த இளைஞர் ... 'வெரி சொறி'' என்ற இருவார்த்தையுடன் மட்டும் சுங்க அதிகாரிகளினுல் வெளியே அனுமதிக்கப்பட்டார்.

அந்த வெண்ணிறப் பொருள் என்ன?

மந்திரமாவது நீறு. வானவர் மேலது நீறு. சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு.

அந்தத் திருநீறின் சக்தி ... வானவரிலும் மேலது என்பது, அந்தச் சுங்க அதிகாரிக்கு எப்படித் தெரியப் போகிறது?

— ஊடுருவி

### யாழ். நகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவிற்குநேற்றுக் காலை ஆயுதப்படையினர் வந்திருந்தபோது நோயாளிகள் எவ்வித பதற்றமுமின்றி சிகிச்சைபெறுவதில் ஈடுபட்டிருந்தனர் நிலைமை மாறி வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. (க)

### புதிய பிரிட்டிஷ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூவாட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பில் இருந்து கொண்டு மாலைதீவுக்கான தூதுவராகவும் கடமையாற்றுவார்.

### நாம் தமிழீழ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் மூவரையும் ஆஜர்செய்தபோது எதிரிகள் மூவரும் இவ்வாறு தெரிவித்தனர்.

பெனடிக் ஸ்ரீபத்மன், சின்னத்துரை குமார், மொகமட் பகுருதீன் ஆகிய மூவருமே இவ்வாறு நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இச்சமயத்தில் குறுக்கிட்ட நீதவான், இது ஜே ஆர் நீதிமன்றம் அல்ல. இது இலங்கை நீதிமன்றம் என்றுர் அப்போது எதிரிகள் மூவரும் ஜே. ஆரைத் தலைவராகக் கொண்ட நாட்டின் நீதிமன்றம் என்றனர்.

1983-ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் பின்னர் திருமதி விவியன் குணவர்த்தனுவுக்கு ஆதரவாக நியாயமான தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியபோது அரச பயங்கரவாதிகள் நீதவான் இல்லத்திற்கு முன்னுல் குழப்பம் விளைவித்தனர். அத்தகைய நிலைதான் இங்கு நிலவுகிறது என்றனர்.

'இது அரசியல் மேடையல்ல நீதிமன்றம்'' என்று நீதிபதி கூறியபோது நாம் இந்த நீதிமன்றத்தை ஏற்கமாட்டோம் என்று எதிரிகள் கூறினர். அப்படியானுல் நீங்கள் விசாரணையின்றிச் சிறையில் பல நாட்கள் இருக்கவேண்டி நேரிடும் என்று நீதவான் கூறியபோது ''நாம் எதையும் ஏற்கத் தயார் என்று எதிரிகள் கூறினர்

இவர்களை பற்றி சட்டமா அதிபரின் முடிவு வரும்வரை இவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

### கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி வந்த சில பஸ்கள் அனுராதபுரத்துக்கு அருகில் தாக்குதலுக்குள்ளான தாகவும் கல்லெறி, அசிட் வீச்சுக்கு இந்த பஸ்கள் இலக்கான காரணத்திஞல் சில பஸ்கள் திரும்பிச் சென்று விட்டதாகவும், ஒரு சில பஸ்கள் மாத்திரம் யாழ்ப்பாணம் வந்ததாகவும் கூறப்படுகிறது.

### உண்ணுவிரதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உண்ணுவிரதம் இருக்க நடவடிக்கைகளை எடுத்து வந்தனர்.

திடீரென சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் கூடி ஆராயந்து, உண்ணுவிரதப் போராட்டத்தை சிறிது காலத்துக்கு ஒத்திவைப்பதென முடிவு செய்தனர். இதன்படி நேற்று உண்ணுவிரதம் நடைபெறவில்லை.

இதற்கிடையில் களவுபோன பொருட்கள் சில நாட்களில் திருப்பிக் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### கூட்டணித்..

[ம் பக்கத்தொடர்ச்சி]

கொழும்பில் இருக்கும் மன்னுர் முன்னுள் எம் பி. சூசைதாசனுடன் தொடர்பு கொண்டு கிழக்கு மாகாண நிலவரங்களையும் அங்குள்ள அகதிகள் நிலைபற்றியும் கேட்டு அறிந்தார்.

### குண்டு வெடித்து ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயைத் தொடர்ந்து இப்பகுதிக்கு சென்றபோது நாய் ஒரு பார்சலைக் கண்டு அதனருகில் சென்று மோப்பம் பிடித்தபோது குண்டு வெடித்து நாய் சிதறுண்டது.

இச்சம்பவம் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### புத்தபிக்கு...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

நான்கு மணி நேரமும் கண்விழிப்புடன் காவல் புரிந்து வருவதாக, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் கூறியுள்ளார். (ரா)